Velundu Vinai Theerka

Muruga · Tamil

வேலுண்டு வினை தீர்க்க மயிலுண்டு வழி காட்ட
கோவிலுக்குள் சென்றேன் அடி - குமரன்
கொலுவிருக்க கண்டேன் அடி

பால் கொண்டு சீராட்டி பழம் கொடுத்து பாராட்டி
பூமாலை போட்டேன் அடி - முருகன் பாமாலை தந்தான் அடி
(வேலுண்டு வினை தீர்க்க...)

பங்குனியில் உத்திரனார் பழனி மலை உச்சியிலே
கந்தன்
அவனை கண்டேன் அடி - கந்தன்
கலி வெண்பா தந்தான் அடி
(வேலுண்டு வினை தீர்க்க...)

வேல் அழகும் மயில் அழகும் வீற்றிருக்கும் பேரழகும்
காலமெல்லாம் நிலைக்கும் அடி - அந்த
காட்சி மனதில் இனிக்கும் அடி
(வேலுண்டு வினை தீர்க்க...)